# தீர்க்கதரிசியின் அடிச்சுவடுகள்

# (1909 – 1965)





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

“நான் கிழக்கத்திய கென்டக்கியின் மலைப்பிரதேசத்திலிருந்த ஒரு சிறு மரக்கொட்டிலில் 1909–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6–ம் தேதி பிறந்தேன்.”

குருடனான பர்திமேயு, 56-0407

வில்லியம் மரியன் பிரன்ஹாம்




“(காற்று) அந்த இலைகளை சுழற்றி, சுழற்றி, சுழற்றி அடித்து மரத்தில் சுற்றிச் கொண்டிருந்தன. அங்கிருந்து “புகை பிடிக்கவோ அல்லது மது அருந்தவோ அல்லது உன் சரீரத்தை எந்த வழியிலும் கறைபடுத்தாதே. உனக்கு வயதாகும்பொழுது நீ செய்ய வேண்டிய ஒரு ஊழியம் உனக்கு இருக்கும்” என்ற சத்தம் வந்தது.”
சாட்சி (வில்லியம் பிரன்ஹாம்), 60-0210
வில்லியம் மரியன் பிரன்ஹாம்


“எனக்கு ஒரு வேட்டை நாய் இருந்தது. அதனுடைய பெயர் ஃபிரிட்ஸ் (Fritz) என்பதாகும். அது பாதி ஏர்டேலும் பாதி நியூஃபவுண்ட்லேண்டுமாக இருந்தது. அது ஒரு மகத்தான பெரிய நாயாகும்.”
சேர்ந்துரையாடலைக் கொண்டிருத்தல், 60-0608
வில்லியம் மரியன் பிரன்ஹாம்


“எனக்கு சேணம் பூட்டப்பட்ட ஒரு குதிரை இருந்தது, நான் –
நான் அதை பிரின்ஸ் (Prince) என்று அழைத்தேன். நான்
அந்த பழக்கப்பட்ட குதிரையை எவ்வளவாக நேசித்தேன்!
வழக்கமாக ஒவ்வொரு நாள் காலையிலும் பள்ளிக்கு போகும்
முன்பாக அதன் மேல் ஏறி
சவாரி செய்வேன்; என்னுடைய
குதிரையில் பிரயாணம் செய்வேன்.”
கடைசி காலத்தில் தேவனுடைய அருளப்பட்ட
வழியை ஏற்றுக்கொள்ளுதல், 63-0115
வில்லியம் மரியன் பிரன்ஹாம்


Dear
Mr. Jesus
புது ஊழியம், 59-1115
“நான் முதலாவது தேவனைக் குறித்து கற்றுக்கொண்ட போது, நான் மனந்திரும்பும்படியாக விரும்பினேன்.” “நான் உட்கார்ந்து, அவர் (தேவன்) என்னை மன்னிக்கும்படியாக கேட்டு ஒரு கடிதம் எழுதினேன்.” “நான் அதை ஒரு மரத்தில் ஆணியடித்து மாட்டினேன்.”
வில்லியம் மரியன் பிரன்ஹாம்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## கேள்விகளும் பதில்களும், 62-0527

“... வானத்திலிருந்து ஒரு சத்தம் கூக்குரலிட்டது. அப்பொழுது அந்த மகத்தான அக்கினி ஸ்தம்பம் சுழன்றுகொண்டே கீழே வந்து, ‘அவருடைய முதலாம் வருகைக்கு யோவான் ஸ்நானன் முன்னோடியாக அனுப்பப்பட்டது போல, இரண்டாம் வருகைக்கு முன்னோடியாயிருக்கும் ஒரு செய்தியை நீ கொண்டிருக்கிறாய்’ என்று கூறினது.”

“பிறகு நான் அந்த பரிதாபமான தாய் ஓப்பசத்திடம் ஓடி அந்த மிருகத்திற்கு அருகே முழங்காலிட்டு, அது திரும்பவும் குணமடைய, ஜெபிக்க, தேவனிடம் என் தலையை உயர்த்தினேன், ஏறக்குறைய ஜீவனே இல்லாத அந்த ஓப்பசத்தின் உடலின் மீது என் கையை வைத்து பயபக்தியுடன் ஜெபித்தேன். நான் மறுபடியுமாக காலூன்றி நிற்கையில் அதனுடைய சரீரத்தில் ஜீவன் புதிதாக வர ஆரம்பித்தது. அது குதித்தெழுந்து தன் குட்டிகளை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு, “அன்புள்ள ஐயா, உமக்கு நன்றி” என்று கூறப் போவது போல என்னை நோக்கிப் பார்த்து விட்டு புல்வெளியைக் கடந்து வண்டிப் பாதையை அடைய புறப்பட்டது. அது வண்டிப் பாதைக்குச் சென்று, பிறகு திரும்பி, அது வந்த விதமாகவே சாலைக்குச் சென்று காட்டுக்குள் சென்றது! நான் மிகவுமாக களிகூர்ந்தேன்.”

பதினோராவது
கட்டளை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்


வில்லியம் மரியன் பிரன்ஹாம்
நான் கேள்விப்பட்டேன்
இப்பொழுதோ காண்கிறேன்,
65-1127 E, (149)
“நான், “ஒரு சிகப்பு அணில், அந்த
மலையிலிருந்து கீழே இறங்கி இந்த வழியாக
வந்து, என் அருகில் வந்து, இங்கிருந்து
புறப்பட்டு சென்று அந்த கிளையின் மேல்
உட்கார்ந்து அந்த விவசாயியை நோக்க
வேண்டும்” என்றேன். நான் உரைத்தபடியே, அது
மலையிலிருந்து கீழே இறங்கி வந்து,
இங்கிருந்து புறப்பட்டு அங்கு சென்று
உட்கார்ந்து, அந்த விவசாயியை நோக்கினது.
அதை நான் சுட்டேன்.”


வில்லியம் மரியன் பிரன்ஹாம்
“நான் சபையை விட்டு போவதற்கு முன்பாக நான் அதை சபையோரிடம் கூறினேன். நான், “ஒன்பது அடி நீளமுள்ள வெள்ளி முனை கொண்ட கிரிஸ்லி வகை கரடி ஒன்றை நான் கொல்லப் போகிறேன்” என்றேன்.”
யூகித்தல், 62-0610M


வில்லியம் மரியன் பிரன்ஹாம்
“அப்பொழுது அம்மலைக் கணவாயை அசைக்கத் தக்கதாக ஒரு சப்தம் பேசியது. “இது கர்த்தருடைய பட்டயம்” என்று அச்சப்தம் கூறியது. கர்த்தருடைய பட்டயம், கர்த்தருடைய வார்த்தையே ஆகும்.”
இடைவெளியில் நிற்றல்,
63-0623, (90)


எக்காளப் பண்டிகை, 64-0719M
“அன்றொரு நாள் நான் கண்ட தரிசனம்
உங்களுக்கு ஞாபகமுள்ளதா?” “ஒவ்வொரு
தேசத்திலிருந்தும் மணவாட்டி, அவர்களுடைய
தேசத்து உடைகளை அணிந்துகொண்டு, அப்படியே
பிசகாதபடி கர்த்தருக்கு முன்பாக நடந்தனர்.”
வில்லியம் மரியன் பிரன்ஹாம்